# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## பட்டப் பின்படிப்புக் கற்கைகள் பீடம்

### மனித உரிமைகள் மேல்நிலை தகுதிச்சான்றிதழ் பாடநெறி

முதலாம் பருவகாலப் பரீட்சை – ஜுன் 2023

**EDHR 1004 – உள்நாட்டுச் சட்டமுறைமையும் அடிப்படை உரிமைகளும்**

இரண்டு (02) மணித்தியாலம்

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 04

இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. 'அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான எந்தவொரு சமகால செயன்முறையிலும், அரசியலமைப்பில் அடிப்படை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் உள்ளீர்க்கப்படுவதனை கவனமாக பரிசீலிக்க வேண்டியது அவசியமானதாகும்.'

   நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

2. சீலான் எனும் நாட்டில் பாதாள உலகக் குழுவொன்றின் தலைவன் என அறியப்பட்ட 'லொக்கா' என்பவன் பொலிசாரின் கடுமையான தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கைது செய்யப்பட்டான். அவன் பொலிசாரின் கட்டுக்காவலில் இருந்தபோது மீள மீள உடல்சார் சித்திரவதைக்கு உள்ளானான் என்பதுடன் அவனுடைய சட்டப் பிரதிநிதித்துவத்தைப் பெறுகின்ற உரிமையும் பொலிசாரால் மறுக்கப்பட்டது. பொலிசாரின் கட்டுக்காவலிலிருந்து தப்பிக்க லொக்கா முயன்றபோது, அவன் பொலிசாரினால் சுடப்பட்டான். அந்த துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட தலைக்காயங்களின் காரணமாக பின்னர் அவன் இறந்தான்.

   சீலான் நாட்டின் அரசியலமைப்பும் சட்ட முறைமையும் இலங்கையின் அரசியலமைப்பையும் சட்ட முறைமையையும் போன்றதெனக் கருதுக.

   மேலுள்ள சூழ்நிலையில், ஏதேனும் இருந்தால், லொக்காவின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதனை ஆராய்க.

3. இலங்கையில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் வகிபங்கினை ஆராய்க.

4. பின்வருவனவற்றுள் ஏதேனும் <u>இரண்டின்</u> (02) தொடர்பில் சிறு குறிப்பொன்றை எழுதுக:

   (அ) இலங்கையில் அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகள்

   (ஆ) இலங்கையில் தகவலைப் பெறுவதற்கான உரிமை

   (இ) அடிப்படை உரிமைகளும் பொதுமக்கள் அக்கறை வழக்காடலும்

   (ஈ) இலங்கை உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம்

**********